DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-------

IN THE COURT OF PRINCIPAL DISTRICIT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUPPATHUR

Calender CC. 65/2022
Miscellaneous:
Preliminary Register Prosecution: PW- 1
Sessions
Deposition of witness for

| | |
|---|---|
| Name : பாண்டிமீனா | Father Name : |
| Village: | Husband Name: செந்தில்குமார் |
| Caste : | Taluk: |
| Religion: | Occupation :;; |
| | Age : /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the day of 23.01.2023

**முதல்விசாரணை:**

நான் தற்போது ஆத்தங்குடி கிராமத்தில் குடியிருக்கிறேன். வேலைக்கு எதுவும் செல்லவில்லை. ஆஜர் எதிரி என்னுடைய கணவரின் அண்ணன். சுமார் 1 வருடத்திற்கு முன்னர் நான் மாலை தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சும் போது அன்று அடையாயம் தெரியாத சிலபேர் வந்து என்னுடன் சண்டை போட்டார்கள். அப்போது எதிரியும் அங்கிருந்தார் எதிரி சொல்லித்தான் அவர்கள் என்னோடு சண்டை போட்டார்கள் என்று நான் நினைத்தேன். அங்கிருந்தவர்கள் என்னை கீழே தள்ளிவிட்டு எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. இது சம்மந்தமாக நான் மதுரை வேலம்மாள் அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக இருந்தபோது கீழச்சீவல்பட்டி காவல்நிலைய சார்புஆய்வாளர் என்னை விசாரித்தார். அப்போது என்னிடம் கையொப்பம் வாங்கினார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். கையொப்பம் செய்யும் போது புகார் வாக்கு மூலத்தில் என்ன எழுதினார்என்று நான் கேட்கவில்லை புகார் வாக்குமூலம கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1**. போலீசார் என்னை அதன் பின் விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் இந்த சாட்சியை இந்த இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 154-ன் படி பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது)**

அ.த.கு.வி.

நானும் ஆஜர் எதிரியும் சமரசம் செய்துகொண்டு இருவரும் சேர்ந்து நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரிதான். சமரசம் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 08.03.2022ம் தேதி கீழச்சீவல்பட்டி காவல்நிலைய சார்புஆய்வாளர் என்னை விசாரித்து பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் குற்ற எண் 9/2022 என வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்த போது 05.03.2022ம் தேதி மாலை 4.30 மணிக்கு நான் எங்கள் ஊரில் உள்ள வயலில் தண்ணீர் பாய்ச்சிக்ெ காண்டிருந்தபோது ஆஜர் எதிரி என்னை அசிங்கமாக பேசி நீ எப்படி தண்ணீர் பாய்ச்சுவாய் என்று சத்தம் போட்டு அதற்கு நான் மரியாதையாக பேசுங்கள் என்று சொன்னபோது எதிரி கையில் வைத்திருந்த மண் வெட்டியால் என் வலது பக்க தலையில் அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தி உன்னை இத்துடன் கொண்றுவிடுவேன் என்று மிரட்டினார் என்று வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரி என்னுடைய கொழுந்தன் என்பதால் என் கணவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவருடன் சமரசம் செய்து கொண்டு புகார் வாக்கு மூலம் மற்றும் வழக்கு விவரங்களை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி அரசு மற்றும் எதிரி தரப்பு மற்றும் வழக்குரைஞர்களுக்கு முன்னால் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்
திருப்பத்தூர்(மு.கூ.பொ.)

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-------
IN THE COURT OF PRINCIPAL DISTRICIT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUPPATHUR

Calender CC. 65/2022
Miscellaneous:
Preliminary Register Prosecution: PW- 2
Sessions
Deposition of witness for

| | |
|---|---|
| Name : வள்ளி | Father Name : |
| Village: | Husband Name: சுப்பிரமணியன் |
| Caste : | Taluk: |
| Religion: | Occupation |
| | Age : /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the day of 23.01.2023

**முதல்விசாரணை:**

நான் தற்போது கோணாபட்டு கிராமத்தில் குடியிருக்கிறேன். கூலிவேலைக்கு செல்வேன். அசா.1 என்னுடைய மருமகள். ஆஜர் எதிரி என்னுடைய மூத்த மகன். அசா.1 எதிரி மீது புகார் கொடுத்தது பற்றி தெரியாது. வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் இந்த சாட்சியை இந்த இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 154-ன் படி பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது)**

அ.த.கு.வி.

அசா.1ம் ஆஜர் எதிரியும் சமரசம் செய்துகொண்டு இருவரும் சேர்ந்து நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான். 08.03.2022ம் தேதி கீழச்சீவல்பட்டி காவல்நிலைய சார்புஆய்வாளர் அசா.1ஐ விசாரித்து பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் குற்ற எண் 9/2022 என வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்த போது 05.03.2022ம் தேதி மாலை 4.30 மணிக்கு அசா.1 எங்கள் ஊரில் உள்ள வயலில் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி அசா.1ஐ அசிங்கமாக பேசி நீ எப்படி தண்ணீர் பாய்ச்சுவாய் என்று சத்தம் போட்டு அதற்கு அசா.1 மரியாதையாக பேசுங்கள் என்று சொன்னபோது எதிரி கையில் வைத்திருந்த மண் வெட்டியால் அசா.1ஐ வலது பக்க தலையில் அடித்து

கொடுங்காயம் ஏற்படுத்தி உன்னை இத்துடன் கொண்றுவிடுவேன் என்று மிரட்டினார் என்று வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரி என்னுடைய மகன் என்பதால் உண்மை விவரங்களை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி அரசு மற்றும் எதிரி தரப்பு மற்றும் வழக்குரைஞர்களுக்கு முன்னால் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்
திருப்பத்தூர்(மு.கூ.பொ.)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-------

IN THE COURT OF PRINCIPAL DISTRICIT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUPPATHUR

Calender CC. 65/2022

Miscellaneous:

Preliminary Register Prosecution: PW- 3

Sessions

Deposition of witness for

| | |
|---|---|
| Name : நித்யா | Father Name : |
| Village: | Husband Name: கார்த்திக் |
| Caste : | Taluk: |
| Religion: | Occupation |
| | Age : /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the day of 23.01.2023

**முதல்விசாரணை:**

நான் தற்போது கீழச்சீவல்பட்டி காவல் நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் வழக்கு பதிவு செய்து புலன்விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் பெரியசாமி அவர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் கோப்புகளின்அடிப்படையில் நன்கு தெரியும். கடந்த 08.03.2022ம் தேதி மதியம் 14.30 மணிக்கு சார்புஆய்வாளர் பெரியசாமி நிலைய பொறுப்பில் இருந்தபோது வேலம்மாள் மருத்துவமனைக்கு சென்று உள் நோயாளியாக இருந்த அசா.1 ஐ விசாரித்து புகார் வாக்கு மூலம் பெற்று அதன் அடிப்படையில் குற்றஎண் 9/22 பிரிவு 294(b), 324, 506(1) இதச மற்றும் பெண்கள் வன்கொடுமைச்சட்டம் பிரிவு 4ல் கீழ் முதல் தகவல் பதிவுசெய்தார். அசல் புகார்வாக்குமூலம் முதல் தகவல்அறிக்கை **அ.சா.ஆ.2 மற்றும் அசா.ஆ.3** அன்றைய தினம் சம்பவயிடம் சென்று சாட்சிகள் பெரியகருப்பன், பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும், மாதிரி வரைபடம் தயார் செய்தார். பார்வைமகஜர் மற்றும் மாதிவரிவரைபடம் **அ.சா.ஆ.4, மற்றும் அ.சா.ஆ.5,** பின்னர்சாட்சிகள் 1 முதல் 7 வரையானவர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தார். எதிரி சிவகங்கை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் கீழ் முன்ஜாமின் பெற்று சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் சென்றுவிட்டார். அசா.1ற்கு மருத்துவ சிகிச்சைஅளித்த வேலம்மாள் மருத்துவமனை மருத்துவர்

ராம்கிருபாகரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து காயச்சான்று பெற்றார். மருத்துவர் வழங்கிய காயச்சான்று **அசா.ஆ.6** அ.சா.1ற்கு ஏற்பட்ட காயம கொடுங்காயம் என மருத்துவர் சான்றளித்ததால் வழக்கின் சட்டப்பிரிவை 324 இதச விற்கு பதிலாக 326 இதச பிரிவில் சேர்த்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.7** பின்னர் மாற்றம் செய்யப்பட்ட சட்டப்பிரிவின் கீழ் எதிரி மீது குற்றஇறுதிஅறிக்கை தாக்கல் செய்தார்.

**குறுக்குவிசாரணை:**

முதல்விசாரணையில் கூறியுள்ள படி எவ்வித வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரிதான். அசா.1 கொடுத்த பொய்யான புகாரின் பேரில் விசாரணை செய்யாமல் எதிரி மீது வழக்கு பதிவு செய்யபப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சம்பவயிடத்தில் வைத்து பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்யப்படவில்லை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக தவறான குற்றஇறுதிஅறிக்கை தாக்கல்செய்யப்பட்டுள்ள என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்தவழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி அரசு மற்றும் எதிரி தரப்பு மற்றும் வழக்குரைஞர்களுக்கு முன்னால் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்
திருப்பத்தூர்(மு.கூ.பொ.)